## ஆகஸ்ட் – 24

**"பரிசுத்த பிதாவே, நீர் எனக்குத் தந்தவர்கள் நம்மைப்போல ஒன்றாயிருக்கும்படிக்கு, நீர் அவர்களை உம்முடைய நாமத்தினாலே காத்துக்கொள்ளும்." - யோவா 17 : 11.**

சபையைக் குறித்து கர்த்தருடைய மனோபாவங்களைக் கொண்ட இந்த இனிமையான சொற்களை ஆழ்ந்து யோசனை செய்யும் போது, தெய்வீகக் குடும்பத்தினுடைய பாக்கியமுள்ள ஒற்றுமையின் மகிமையான சஷண நேரக் காட்சியைப் பார்க்கிறோம். அது நோக்கத்தின் ஒற்றுமை, அன்பின் ஒற்றுமை, கனத்தின் ஒற்றுமை, பரஸ்பர உடைமையின் ஒற்றுமையாயிருக்கிறது. இந்த ஒற்றுமை தனக்கும் பிதாவுக்கும் ஏற்கனவே இருக்கிறதாக நமது கர்த்தர் கூறினார். ஆனால் அவர்களுடைய சீஷர்களைப் பொறுத்தமட்டும், அது எதிர்பார்க்கக் கூடியதாக இருந்தது, இப்பவும் அப்படியே இருக்கிறது. இந்த ஒற்றுமையை முற்றிலுமாக அடைவதே லட்சியமான இலக்கு. இதை அடைய விரும்புவதற்கே நாம் போதிக்கப்பட்டிருக்கிறோம். **- Z '03, 77(R 3160)**

தம்முடைய ஜனங்களுக்காக நமது இரட்சகர் ஏறெடுக்கிற ஜெபம், அதன் எளிமையிலும் பரந்த நோக்கத்திலும் அழகாக இருக்கிறது. பிதாவின் பரிசுத்தத்தை பயபக்தியுடன் ஒப்புக் கொள்ளுகிற இரட்சகர், பிதா தம்முடைய மகிமையான குணங்களையும், ஏற்பாட்டையும், கிரியைகளையும் தம்முடைய சீஷர்களுடைய நன்மைக்கென்று உபயோகிக்க தேவனிடம் வேண்டுகிறார். இப்படி செய்வதில் அவர்களுக்கு வழிகாட்டவும், அவர்களை நடத்தவும், அடக்கவும், திருத்தவும், உற்சாகப்படுத்தவும், கடைசிவரை மேன்மைப்படுத்தவும் வேண்டுகிறார். இப்படிச் செய்வதினால், தேவனின் ஒரே பரிசுத்த ஆவியின் நிறைவில் எல்லாரும் வளர்ந்து, இவ்விதமாக பிதாவுக்கும் குமாரனுக்கும் ஊடே இருக்கிற ஒரே விதமான ஒற்றுமையை அவர்களும் அடைவார்கள். இந்த ஒற்றுமை ஆள்தன்மையின் ஏகம் அல்ல. அப்படியானால், கர்த்தருடைய எல்லா ஜனங்களும் ஒரே ஆள் என்பதைக் குறிக்கும். ஆனால் இருதயத்தின் மனதின், நோக்கத்தின், சித்தத்தின் ஒரு ஒற்றுமை. ஒரு மகிமையான குடும்ப ஒற்றுமை இதுதான். இதுதான் ஆர்வத்துடன் நாடித் தேடப்படவேண்டியது. **- P '33, 111.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

**1பேது 1:5; யூதா 1,24; யோவா 6:39; 17:2,9,10,12-18,21-23; ரோம 12:5; 1கொரி 1:10; கலா 3:28; யோவா 10:30,38; 14:9,11,20; 1யோவா 1:3; 3:24.**

**கோபுர வாசிப்பு : Z '03, 77 (R 3160)**

**வினாக்கள் : இந்த வாரத்தில் தெய்வீக குடும்ப ஐக்கியத்தில் நான் அதிகதிகமாக வளர்ச்சியடைந்தேனா? எப்படி? அதில் உதவியாக இருந்தது எது? அல்லது இடையூறாக இருந்தது எது? பலன்கள் எவை?**